15—

கூடுதல் பேருந்து

•9730—**திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டை, சருகனி, பொன்னலக்கோட்டை, சூராணம் வழியாக கூடுதலாக அரசுப் பேருந்துகளை இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேவகோட்டை, சருகனி, பொன்னலக்கோட்டை, சூராணம் வழியாக கூடுதல் பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டையிலிருந்து சூராணத்திற்கு இப்போது இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய பேருந்துகளினுடைய நடைகள் போதாத நிலை அங்கே ஏற்பட்டு இருக்கிறது. இப்போது பேருந்துகளின் கூரைகளிலே மக்கள் பயணம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் உடனடியாக கூடுதல் நடைகளை அந்த வழித்தடங்களில் ஏற்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டை, சருகனி, பொன்னலக்கோட்டை, சூராணம் வழியாக நாள் ஒன்றிற்கு காரைக்குடி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 12 நடைகளும், தனியார் பேருந்துகளினால் 6 நடைகளும் ஆக மொத்தம் 18 நடைகள் பேருந்து வசதியுள்ளது. இவ்வழித் தடங்களில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு 75% ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பயணிகள் கூரைகளிலெல்லாம் அமர்ந்து பயணம் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அங்கே பயணிகள் அடர்வு 75

சதவீதம்தான் இருக்கிறது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கோரிக்கை தடத்தில் தற்போது இயக்கப்படும் பேருந்து வசதியே போதுமான அளவிற்கு இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தடத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. கே.ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழித்தடத்தில் இயங்கிக் கொண்டு இருக்கக்கூடிய பேருந்துகள் எல்லாம் பழைய பேருந்துகளாக இருக்கின்றன. உண்மையிலேயே அந்தப் பேருந்துகளின் கூரைகளிலே மக்கள் அமர்ந்து பிரயாணம் செய்வதை நான் நேரிலேயே பார்த்து இருக்கிறேன். எனவே தயவுகூர்ந்து நீங்கள் இந்த வழித்தடத்தில் கூடுதல் நடைகளை இயக்குவதற்கு ஏற்பாடு செய்ய முன்வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய பேருந்துகள் இயக்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்புதான் இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் மாற்றி, படிப்படியாக இப்போது புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு, பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அந்தப் பகுதியிலே ஓடுகின்ற பழைய பேருந்துகளை மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதல் வசதி கேட்டு இருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற வசதியே போதுமானதாக இருக்கிறது என்று அரசு கருதுகிறது. இருந்தாலும்கூட இன்னும் கூடுதல் பேருந்து வசதி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினாரானால் அதைப்பற்றியும் அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.